## <u>இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்.</u>

**O.S. No.90/2020**

2023 ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 10 ம் நாள் திங்கள் கிழமை **வாதி தரப்பு** சாட்சியாக வா.**சா2** ன் வாக்குமூலம், (1969 ம் ஆண்டின் 54–வது விதியின் 95 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திரு. S. எழிலரசன், தலைமைஎழுத்தர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கோபாலகிருஷ்ணன் | வயது | : |
| த.பெ./க.பெ. | : | தொழில் | : |
| ஊர் | : | மாவட்டம் | : |
| வட்டம் | : | | |

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் சாட்சியத்தின் முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விபரங்கள் எல்லாம் நான் சொன்னவைதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். வாசாஆ 7 ல் உள்ள முதல்சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். செட்டில்மென்ட் எழுதிய விவரம் எனக்கு நேரடியாக தெரியும்.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

இவ்வழக்கில் சாட்சி சொல்ல அழைப்பாணை வரவில்லை. வாசாஆ 7 ல் செட்டில்மென்ட் ஆவணத்தில் நான் பதிவு அலுவலகத்தில் வைத்து சாட்சி கையொப்பம் போட்டேன். அன்று பதிவு அலுவலகத்திற்கு கோவிந்தசாமி மற்றும் நண்பர்கள் 3 பேர் வந்தார்கள். நண்பர்களது பெயர் விலாசம் எனக்கு தெரியாது. கோவிந்தசாமியை எனக்கு 10, 15 வருடங்களாக தெரியும். கோவிந்தசாமி மீது நிறைய வழக்குகள் இருந்தன

என்றால் ஆமாம் அது பற்றி அவ்வளவாக தெரியாது. கோவிந்தசாமி இறக்கும்போது மீனாட்சியுடன் கணவன் மனைவியாகத்தான் இருந்தனர். அவர்களுக்கிடையே வாக்குவாதங்கள், பிரச்சனைகள், வழக்குகள் இருந்தன. பத்திரம் பதியும்போது மூலப்பத்திரம் கொண்டுவரவில்லை பேங்க் லாக்கரில் இருந்ததாக கோவிந்தசாமி சொன்னார். எந்த பேங்க் லாக்கர் என்று எனக்கு தெரியாது. பத்திரத்தை யார் வாங்கி சென்றார்கள் என்று எனக்கு தெரியவில்லை. செட்டில்மென்ட் பத்திரத்தில் என்னுடன் சாட்சி கையொப்பம் போட்ட இன்னொருவர் பெயர் தெரியாது அவரை பார்த்தால் அடையாளம் தெரியும். செட்டில்மென்ட் பத்திரத்தை கோவிந்தசாமியின் முதல்மனைவியின் மகள் ஆர்த்திக்கு ஏதேனும் செய்யவேண்டும் என்று முடிவு செய்து எழுதிவைத்தார். செட்டில்மென்ட் சொத்தை ஆர்த்திதான் அனுபவிக்கிறாரா என்றால் மீனாட்சிதான் இருக்கிறார். இந்த வழக்கு நடைபெறும் விவரத்தை கோவிந்தசாமியின் முதல் மனைவிதான் சொன்னார். வாதிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றும் வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஓம்/- A. மலர்விழி)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.